<u>சாதாரணக் கூட்டம்</u>

கூத்தாநல்லூர் நகராட்சியின் 2020ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 நாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்ற <u>அவசரக் கூட்ட</u> நடவடிக்கைகள்

| மன்றக்கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 24.09.2021 | **பொருள் எண் 1**<br>கூத்தாநல்லூர் நகராட்சிக்குட்பட்ட அனைத்து சாலைகள் மற்றும் தெருக்களிலும் தெரு விளக்குகள் இல்லாத பகுதிகளில் புதியதாக தெரு விளக்குகள் அமைப்பதற்கு ரூ.25.00 இலட்சத்திற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கிடு பெறும் பொருட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | தீர்மானம் எண்:- 926<br>**ஏற்கப்பட்டது** |

| **வ. எண்.** | **பணியின் பெயர்** | **மொத்த LED தெருவிளக்குகள்** | **மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|---|---|
| 1 | தெருவிளக்குகள் பொருத்தப்படாத கம்பங்களில் புதியதாக 20W, 40W தெருவிளக்குகள் பொருத்தும் பணி | 158 எண்ணிக்கை | 17.00 |
| 2 | 240W சோடியம் ஆவி விளக்குகளுக்கு பதிலாக புதிதாக 150W LED தெருவிளக்குகள் பொருத்தும் பணி | 69 எண்ணிக்கை | 8.00 |
| | கூடுதல் | 227 எண்ணிக்கை | 25.00 |

அலுவலக குறிப்பு

மேற்காணும் விபரப்படி தெருவிளக்குகள் அமைக்கும் பணிக்கு அரசு நிதியின் கீழ் மான்யமாக நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு விரிவான திட்ட அறிக்கையினை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பலாம்

| | | |
|---|---|---|
| 24.09.2021 | **பொருள் எண் 2**<br>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் கடித ந.க.எண். 2910/2021/பி1 நாள் 25-09-2021 தேதிய கடிதத்தில் கோரியுள்ள DAY-NULM திட்டம் நகர்புற தெருவோர கடைக்காரர்களுக்கு உதவி அளிக்கும் திட்டம் 2021-2022-க்கான திட்ட முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டு அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.37,32,000/-னை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைத்திட மேற்படி திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்,<br>(ந.க.எண். 429/2021/எப்1) | தீர்மானம் எண்:- 927<br>**ஏற்கப்பட்டது** |

ஆணையர் / தனி அலுவலர்
கூத்தாநல்லூர் நகராட்சி

<u>சாதாரணக் கூட்டம்</u>

கூத்தாநல்லூர் நகராட்சியின் 2020ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 நாள் வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்ற <u>சாதாரணக்</u> கூட்ட நடவடிக்கைகள்

| மன்றக்கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 30.09.2021 | **பொருள் எண் 1**<br>நகராட்சி ஆணையர் அவர்களது ஆகஸ்ட் 2021 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1) | தீர்மானம் எண்:-928<br>**ஏற்கப்பட்டது** |
| 30.09.2021 | **பொருள் எண் 2**<br>நகராட்சி பொறியாளர் அவர்களது ஆகஸ்ட் 2021 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1) | தீர்மானம் எண்:-929<br>**ஏற்கப்பட்டது** |
| 30.09.2021 | **பொருள் எண் 3**<br>கூத்தாநல்லூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள காடுவெட்டித்தெரு மற்றும் அக்கரை புதுத்தெருவில் புதிய கழிப்பிடங்கள் மராமத்து செய்யும் பணிக்கு ரூ.7.00 இலட்சத்திற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கிடு பெறும் பொருட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மேற்காணும் விபரப்படி சமுதாய கழிப்பிடங்கள் மராமத்து செய்யும் பணிக்கு அரசு நிதியின் கீழ் மான்யமாக நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு விரிவான திட்ட அறிக்கையினை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பலாம். | தீர்மானம் எண்:-930<br>**ஏற்கப்பட்டது** |
| 30.09.2021 | **பொருள் எண் 4**<br>கூத்தாநல்லூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள அல்லிக்கேணி குளம் மற்றும் தோட்டச்சேரி திருவாசல் குளம் தூர்வாரும் பணி மற்றும் மேம்பாட்டு பணிகள் செய்யும் பணிக்கு ரூ-170.00 இலட்சத்திற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு பெறும் பொருட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மேற்காணும் விபரப்படி குளங்கள் தூர்வாரும் பணி மற்றும் மேம்பாட்டு பணிகள் செய்யும் பணிக்கு அரசு நிதியின் கீழ் மான்யமாக நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு விரிவான திட்ட அறிக்கையினை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பலாம். | தீர்மானம் எண்:-931<br>**ஏற்கப்பட்டது** |
| 30.09.2021 | **பொருள் எண் 5**<br>இந்நகராட்சியில் 2008 ஆம் வருடம் முதல் நகர்மன்ற வழக்கறிஞர் நியமனம் செய்யப்படாமல் இருந்து வருகிறது. இந்நகராட்சிக்கு பொதுமக்கள் மற்றும் பிற நபர்களிடமிருந்து இவ்வலுவலகத்திற்கு செலுத்த வேண்டிய சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம் மற்றும் குத்தகை தொகை செலுத்தாத நபர்கள் மற்றும் இந்நகராட்சியால் வழங்கப்பட்ட கட்டிட அனுமதியினை மீறி கட்டப்படும் கட்டிடங்களின் உரிமையாளர்கள், பொது சுகாதார நடவடிக்கைகளை மீறுபவர்கள் மீது நீதி மன்றத்தில் வழக்கு தொடர ஏதுவாகவும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 351ன் கீழ் இந்நகர்மன்றத்திற்கு சிவில் மற்றும் கிரிமினல் நடவடிக்கைகளுக்கு ஆலோசணைகளை வழங்கிட ஏதுவாக மூன்றாண்டு காலத்திற்கு வழக்கறிஞர் நியமனம் செய்துகொள்ளவும், வழக்கறிஞருக்கு ஊதியம் மற்றும் வழக்கு கட்டணங்கள் செலவினங்களுக்காக உத்தேச செலவுத் தொகை ரூ.1,00,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு | தீர்மானம் எண்:-932<br>**ஏற்கப்பட்டது** |

<table>
<tr><td></td><td>மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 014/2021/சி1</td><td></td></tr>
<tr><td>30.09.2021</td><td>

**பொருள் எண் 6**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண். 20980/2021/எச்2 நாள் 16.09.2021ந் தேதிய கடிதத்தின்படி எதிர்வரும் வடகிழக்கு பருவ மழையினை முன்னிட்டு மழைக்காலங்களில் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் தாழ்வான நீர் தேங்கும் பகுதிகளில் மழைநீர் தேங்கி பொது மக்களுக்கு சுகாதார கேடு மற்றும் உயிர்சேதம் ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு அனைத்து நகராட்சி பகுதிகளில்20.09.2021 முதல் 25.09.2021 வரை மாபெரும் தூய்மை பணி முகாம் நடத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.. மேற்படி முகாமினை சிறப்பாக நடத்திடவும் மேலும் எதிர்வரும் மழைக்காலத்தினை ஒட்டி நகர்பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்களை சுத்தம் செய்யவும் வாய்க்கால்களை சுத்தம் செய்யவும் கீழ்குறிப்பிட்டுள்ள பொருட்கள் உடடினயாக தேவைப்படுகிறது.

<table>
<tr><th>வ.எண்.</th><th>பொருளின் பெயர்</th><th>எண்ணிக்கை</th></tr>
<tr><td>1</td><td>மண்வெட்டி</td><td>25</td></tr>
<tr><td>2</td><td>அலுமினிய அன்னக்கூடை</td><td>50</td></tr>
<tr><td>3</td><td>கடப்பாரை</td><td>3</td></tr>
<tr><td>4</td><td>தென்னை மாறு</td><td>100</td></tr>
<tr><td>5</td><td>இரும்பு கொக்கி</td><td>25</td></tr>
<tr><td>6</td><td>சாக்கடை கரண்டி</td><td>25</td></tr>
<tr><td>7</td><td>பெரிய அரிவாள்</td><td>30</td></tr>
<tr><td>8</td><td>அலக்கு அரிவாள்</td><td>30</td></tr>
<tr><td>9</td><td>ஜாடி</td><td>30</td></tr>
<tr><td>10</td><td>கைகவசம்</td><td>200</td></tr>
<tr><td>11</td><td>ஒளிரும் சட்டை</td><td>100</td></tr>
</table>

மேற்படி முகாமினை சிறப்பாக நடத்திடவும் மழைக்காலத்தினை சமாளித்திடவும் மேற்படி தளவாட பொருட்களை உடன் வாங்கி வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

</td><td>தீர்மானம் எண்:-933<br>**ஏற்கப்பட்டது**</td></tr>
<tr><td>30.09.2021</td><td>

**பொருள் எண் 7**

இந்நகராட்சி பகுதியில் தெருநாய்கள் அதிகமாக திரிவதால் சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அச்சத்தில் உள்ளனர். மேலும் வாகன ஓட்டிகளையும் துரத்துவதால் பல விபத்துக்கள் ஏற்படுகிறது. மேலும் ஒரு சில நாய்கள் வெறிபிடித்து கடிப்பதால் வெறிநாய்கடி நோய் பரவ வாய்ப்புள்ளது. எனவே இந்நகர் பகுதியில் தோராயமாக உள்ள 267 நாய்களையும் பிடித்து இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தவும் அறுவை சிகிச்சை மேற்கொள்ளவும், வெறிநாயாக மாறாமல் தடுக்கும் தடுப்பு ஊசி போடவும் விலங்குகள் நல வாரியத்தின் அனுமதி பெற்ற People for Animals கும்பகோணம் என்ற தொண்டு நிறுவனத்திற்கு மேற்படி பணிகளை வழங்கிட ஆகும உத்தேச செலவினம் ரூ.1,00,000/-க்கு இந்நகர் மன்ற தீர்மான எண் 781 நாள் 29.10.2020ல் அனுமதி பெறப்பட்டு தற்போது வரை மொத்தம் 102 நாய்கள் ரூ.72000/- தொகை செலவிடப்பட்டுள்ளது. எனவே தற்போது பொது நல அமைப்புகளும் நாய்களை பிடித்து அப்புறப்படுத்த வலியுறுத்தி வருகின்றனர். எனவே பொதுமக்கள் நலன் கருதி எதிர்வரும் காலங்களில் மீதமுள்ள நாய்களை பிடித்து கருத்தடை செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.1,00,000/- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 718/2020/எச்1)

</td><td>தீர்மானம் எண்:-934<br>**ஏற்கப்பட்டது**</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 30.09.2021 | **பொருள் எண் 8**<br>இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வந்த TN50 1550 வாகனத்தை கழிவு செய்வதற்கு தானியங்கி பொறியாளர், அரசு தானியங்கி பணிமனை, தஞ்சாவூர் அவர்களது ந.க.எண். அ5/644/2021நாள் 03.09.2021ன்படி ரூ.32,000/- உத்தேச தொகையாக நிர்ணயம் செய்து மதிப்பீடு அளித்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட தொகையினை குறைந்தபட்ச ஏலத்தொகையாக நிர்ணயம் செய்து பொது ஏலம் விடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்(ந.க.எண். 423/2015/எச்1) | தீர்மானம் எண்:-935<br>**ஏற்கப்பட்டது** |
| 30.09.2021 | **பொருள் எண் 9**<br>இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வந்த TN50-A-2291 வாகனத்தை கழிவு செய்வதற்கு தானியங்கி பொறியாளர், அரசு தானியங்கி பணிமனை, தஞ்சாவூர் அவர்களது ந.க.எண். அ5/644/2021நாள் 03.09.2021ன்படி ரூ.34,000/-உத்தேச தொகையாக நிர்ணயம் செய்து மதிப்பீடு அளித்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட தொகையினை குறைந்தபட்ச ஏலத்தொகையாக நிர்ணயம் செய்து பொது ஏலம் விடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 423/2015/எச்1) | தீர்மானம் எண்:-936<br>**ஏற்கப்பட்டது** |
| 30.09.2021 | **பொருள் எண் 10**<br>இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வந்த TN51X3572 வாகனத்தை கழிவு செய்வதற்கு தானியங்கி பொறியாளர், அரசு தானியங்கி பணிமனை, தஞ்சாவூர் அவர்களது ந.க.எண். அ5/644/2021நாள் 03.09.2021ன்படி ரூ.31,000/-உத்தேச தொகையாக நிர்ணயம் செய்து மதிப்பீடு அளித்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட தொகையினை குறைந்தபட்ச ஏலத்தொகையாக நிர்ணயம் செய்து பொது ஏலம் விடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 423/2015/எச்1) | தீர்மானம் எண்:-937<br>**ஏற்கப்பட்டது** |
| 30.09.2021 | **பொருள் எண் 11**<br>பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் TN 50 X 2638 TATA ACE வாகனம் மூலம் தற்போது திடக்கழிவு மேலாண்மை பணிகள், கொரோனா விழிப்புணர்வு விளம்பர பணிகள், கொரோனா தடுப்பூசி முகாம் பணிகள், வரி விளம்பரங்கள், அம்மா உணவத்திற்கு அரிசி மளிகை பொருட்கள் ஏற்றி வருதல், மற்றும் இதர பணிகள் மேற்படி வாகனம் மூலம் மட்டுமே பார்க்கப்பட்டு வருகிறது. மேற்படி வாகனத்திற்கு தகுதிசான்று 27.10.2021 உடன் முடிவடைய உள்ளது. மற்றும் இன்சூரன்ஸ் 19.10.2021 உடன் முடிவடைய உள்ளது. கீழ்கண்ட பணிகளை பழுது நீக்கி போக்குவரத்து சான்று பெறுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,05,000/-க்கும், மற்றும் மேற்படி வாகனத்திற்கு இன்சூரன்ஸ் புதுப்பிப்பதற்கு ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.25,000/-க்கும் சேர்த்து மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>1. கியர் பாக்ஸ் பழுது பார்க்கும் பணி<br>2. கிளட்ச் பிளேட் சரி செய்தல்<br>3. புல் டிங்கரிங் ஒர்க்<br>4. பின்புற புளோரிங் மாற்றுதல்<br>5. முன்புற சேஷிஸ் பழுது பார்த்தல்<br>6. நான்கு சக்கரத்திற்கும் கிரீஸ் பேக்<br>7. நான்கு புதிய டயர்கள் மாற்றும் பணி<br>8. புதிய பேட்டரி மாற்றுதல்<br>9. முழு பெயிண்டிங் செய்தல்<br>10. இருக்கை பழுது பார்த்தல்<br>11. எலக்ட்ரிக்கல் பணிகள் பார்த்தல்<br>அலுவலக குறிப்பு | தீர்மானம் எண்:-938<br>**ஏற்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண் 523/2020/எச்1) | |

<table>
<tr>
<td>30.09.2021</td>
<td>பொருள் எண் 12<br>இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் குடிநீர் பராமரிப்பு மற்றும் பழுது நீக்கும் பணி (6 மாத காலத்திற்கு) 29.09.2021 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br>
<table>
<tr><td>வ. எண்</td><td>ஒப்பந்ததாரர் பெயர்</td><td>ஒப்பந்த தொகை</td><td>ஒப்பந்தபுள்ளி தொகை</td><td>சதவிகிதம்</td></tr>
<tr><td>1</td><td>திரு.வீ,எழில்மாறன் ஒப்பந்ததாரர்<br>கொரடாச்சேரி ரோடு<br>லெட்சுமாங்குடி</td><td>498063.40</td><td>497818</td><td>0.05 % மதிப்பீட்டைவிட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>காவ்யா என்டர்பிரைசஸ்<br>மன்னார்குடி</td><td>498063.40</td><td>498307</td><td>0.05% மதிப்பீட்டைவிட அதிகம்</td></tr>
</table>
மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள திரு.வீ,எழில்மாறன் ஒப்பந்ததாரர் கொரடாச்சேரி ரோடு லெட்சுமாங்குடி என்பவரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினை விட 0.05% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண். 2020/இ1)</td>
<td>தீர்மானம் எண்:-939<br>ஏற்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>30.09.2021</td>
<td>பொருள் எண் 13<br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் TN 50 AS 3522 TATA ACE வாகனத்தின் 5 டயர்களில் 2 டயர்கள் வெடிக்கக் கூடிய நிலையிலும் 3 டயர்கள் மிகவும் தேய்ந்த நிலையில் உள்ளது. மேலும் மேற்படி வாகனத்தின் பேட்டரி பழுதடைந்துள்ள காரணத்தினால் வாகனம் இயக்குவதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. மேற்படி வாகனத்தை கொண்டு நான்கு வார்டுகளில் மக்கும் குப்பை மக்காத குப்பை என பிரித்து வாங்கப்பட்டு வருகிறது. எனவே மேற்படி பணி தொய்வில்லாமல் நடைபெற TN 50 AS 3522 வாகனத்திற்கு 5 புதிய டயர்கள் மற்றும் புதிய பேட்டரி வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.30,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மானம் எண்:-940<br>ஏற்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>பொருள் எண் 14<br>இந்நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் 12BOV வாகனத்தில் 10 வாகனங்கள் பழுதாகி இயங்காத நிலையில் உள்ள 6 வாகனங்கள் பழுது நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவீனம் ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br><br>அலுவலக குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்</td>
<td>தீர்மானம் எண்:-941<br>ஏற்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>பொருள் எண் 15<br>இந்நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் 12 BOV வாகனத்தில் 10 வாகனங்கள் பழுதாகி இயங்காத நிலையில் உள்ள 4 வாகனங்கள் பழுது நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவீனம் ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலக குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்</td>
<td>தீர்மானம் எண்:-942<br>ஏற்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>பொருள் எண் 16<br>இந்நகராட்சிக்குட்பட்ட கோரையாறு நடுத்தெரு, கடைத்தெரு, பாரதிநகர், லெட்சுமாங்குடி மேலத்தெரு, இந்திரா நகர், மரக்கடை தெற்கு தெரு ஆகிய இடங்களில் குடிநீர் பகிர்மான குழாய் இல்லாததால் குடிநீர் இணைப்பு வீடுகளுக்கு வழங்கிட வேண்டியுள்ளதால், மேற்படி இடங்களில் புதிய குடிநீர் பகிர்மான குழாய் அமைப்பதற்கு ஆகும் மதிப்பீடு தொகை ரூ.2,80,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது நிதியில் மேற்கொள்ளலாம்.</td>
<td>தீர்மானம் எண்:-943<br>ஏற்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | (ந.க.எண். 496/2021/இ1) | |
| | **பொருள் எண் 17**<br>இந்நகராட்சிக்குட்பட்ட பழைய நகராட்சி அலுவலகத்தில் உள்ள மோட்டார் அறையில் குளோரின் மோட்டார் இயங்கி வந்தது. தற்பொழுது பழுதாகி உள்ளதால் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட சிரமம் ஏற்படுகிறது. அதனை பழுது நீக்கிடவும் அதற்கான புதிய மோட்டார் பொருத்திடவும் மற்றும் உதிரிபாகங்கள் வாங்கி பொருத்திடவும் அதற்கான தொகை ரூ.1,15,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>**2.** பொது நிதியில் மேற்கொள்ளலாம். | தீர்மானம் எண்:-944<br>**ஏற்கப்பட்டது** |
| | **பொருள் எண் 18**<br>இந்நகராட்சிக்குட்பட்ட 19வது வார்டு ஜாவியா தெருவில் உள்ள பழைய காங்கிரீட் பாலம் உடைந்து உள்ளதை உடைத்து அப்புறப்படுத்திவிட்டு புதியதாக RCC காங்கிரீட் பாலம் அமைப்பதற்கு ஆகும் மதிப்பீடு ரூ.65000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மானம் எண்:-945<br>**ஏற்கப்பட்டது** |

**பொருள் எண் 19**

இந்நகராட்சிக்குட்பட்ட நகராட்சி பராமரிப்பில் உள்ள கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு திட்டம் செயல்படுத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளதால் கீழ்கண்ட இடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைத்திட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது

| வ.எண். | இடங்கள் | மழைநீர் சேகரிப்பு எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | புதிய நகராட்சி அலுவலக கட்டிடம் | 2 |
| 2 | அம்மா உணவகம் | 2 |
| 3 | புதிய பேருந்து நிலையம் | 1 |
| 4 | பழைய நகராட்சி அலுவலகம் | 2 |
| 5 | நகராட்சி வணிக வளாகம் | 1 |
| 6 | பழைய ஆட்டு இறைச்சி கூடம் | 1 |
| 7 | புதிய ஆட்டு இறைச்சி கூடம் | 2 |
| 8 | மேல்கொண்டாழி நீர்தேக்க தொட்டி வளாகம் | 1 |
| | கூடுதல் | 12 |

மேற்கண்ட 12 இடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைத்திட ஆகும் மதிப்பீடு ரூ.60,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்:-946

**ஏற்கப்பட்டது**

**பொருள் எண் 20**

,இந்நகராட்சிக்குட்பட்ட மேல்கொண்டாழி பாசன வாய்க்கால், பொதுப்பணித்துறையினரால் தூர் வாரப்பட்டது. அதே போல் மரக்கடை மெயின்ரோட்டில் உள்ள வாய்க்காலினை தூர் வார இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினரால் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அதன்படி பொதுப்பணித் துறையினரால் மேற்படி வாய்க்கால் தூர் வாரப்பட்டது. மேற்படி தூர் வாரப்பட்ட மண்ணினை அப்புறப்படுத்த இரண்டு டிராக்டர்கள் வாடகைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு நாள் ஒன்றுக்கு வாடகை தொகை ஒரு வண்டிக்கு ரூ.3000 வீதம் இரண்டு வண்டிகளுக்கு மொத்தம் ரூ.6000 வீதம் 15.09.2021, 16.09.2021, 17.09.2021 ஆகிய மூன்று நாட்களுக்கு மொத்தம் ரூ.18000/? செலவினம் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி செலவினம் திரு.கி.அருண்குமார் சுகாதார ஆய்வாளர் செலவினம் செய்துள்ளார். மேற்படி தொகையினை அன்னாருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 758/2021/இ1)

தீர்மானம் எண்:-947

**ஏற்கப்பட்டது**

**பொருள் எண் 21**

இந்நகராட்சி பழைய நகராட்சி அலுவலகத்தில் இயங்கி வந்த Dosing Pump (ம) புதிய குளோரின் மோட்டார் Hose அமைக்கும் பணிக்கு 19.08.2021 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | பகவதி ஏஜென்சீஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் மன்னார்குடி | 275300 | 275100 | 0.07 % மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | காவ்யா என்டர்பிரைசஸ் மன்னார்குடி | 275300 | 275600 | 0.11% மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள பகவதி ஏஜென்சீஸ் இந்தியா பிரைவேட்

தீர்மானம் எண்:-948

**ஏற்கப்பட்டது**

| | | |
|---|---|---|
| | லிமிடெட் மன்னார்குடி என்பவரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினை விட 0.07% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண். 2020/இ1) | |

ஆணையர் / தனி அலுவலர்
கூத்தாநல்லூர் நகராட்சி